**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.03/2022
Prosecution witness.09

| | |
|---|---|
| பெயர் : திரு. செல்வராஜ் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 31st day of January 2025.

31.01.2025

(எதிரிகள் 1 முதல் 5 ஆஜர்).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 14.08.2021ம் தேதி மாலை 03.30 மணிக்கு நான் முதுகுளத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கீழக்கன்னிச்சேரி கிராமத்தை சேர்ந்த முனியம்மாள், க.பெ.வெள்ளிமுத்து என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றேன்.

**2)** புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.290/2021 இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) IPC and 4 of TNPHW Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5**).

**3)** பின்பு அன்றைய தினமே 17.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான கோபிநாத் மற்றும் கலைமணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6. பார்வை மகஜர் அ.சா.ஆ.7).**

**4)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகள் முனியம்மாள், ராஜேஸ்வரி, காளீஸ்வரி, ராணியம்மாள், கோபிநாத் மற்றும் கலைமணி ஆகியோரை தனித்தனியே

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை.

**5)** பின்பு இவ்வழக்கில் 06.12.2021ம் தேதி காயம் பட்ட அசா.1க்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திருமதி. ஜெபமலர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றேன். வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**6)** பின்பு இவ்வழக்கில் விசாரித்து இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) IPC and 4 of TNPHW Actன் பிரிவுகளிருந்து இதச பிரிவுகள் 294(b), 323, 325, 506(ii) and 4 of TNPHW Actன் பிரிவுகளாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8).**

**7)** பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 325, 506(ii) and 4 of TNPHW Actன் கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியும் நேரமும் 14.08.2021ம் தேதி மதியம் 02.15 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 14.08.2021ம் தேதி மாலை 04.30 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிய தேதி 09.09.2021ம் தேதி காலை 10.30 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை 26 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பியதற்கு ஏதேனும் சிறப்பு காரணங்கள் உண்டா என்றால் இல்லை.

2) சம்பவம் குறித்து அ.சா.1 என்னிடம் புகார் மனு கொடுத்தாரா அல்லது புகார் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் புகார் வாக்குமூலமாக கொடுத்தார். புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக யாரும் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் 4வது காலத்தில் புகார் மனு எழுத்து மூலமாக பெறப்பட்டதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வந்ததாக எனது

விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தெரிய வந்தது. அ.சா.1ன் சொத்துகள் அனைத்தையும் அ.சா.2 ராஜேஸ்வரி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை குறிப்பிட்ட சில சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்.

3) அ.சா.1 வாக்குமூலத்திலோ, என்னுடைய விசாரணையிலோ சம்பத்தன்று ஊரில் திருவிழா நடந்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 என்னுடைய விசாரணையில் சம்பத்தன்று ஊரில் திருவிழாவின் போது அன்னதானத்தில் சாப்பிட சென்றபோது அ.சா.1யை 1ம் எதிரி சேதுராமன் மிரட்டியதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. சம்பவத்தன்று அ.சா.2 மற்றும் அ.சா.3ம் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் அவர்களை வழக்கிற்காக பொய்யாக சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) என்னுடைய விசாரணையில் மருத்துவர் அ.சா.1யை எத்தனை நபர்கள் தாக்கியதாக கூறினார் என்றால் கூறவில்லை. அ.சா.1 வாக்குமூலத்திலோ, என்னுடைய விசாரணையிலோ 2 முதல் 5 எதிரிகள் அ.சா.1ன் இடுப்பில் மிதித்ததாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் 1ம் எதிரி சேதுராமன் மற்றும் 2ம் எதிரி பூவரசன் இடுப்பில் மிதித்ததாக குறிப்பிட்டுள்ளார். 1ம் எதிரி சேதுராமன் மற்றும் 2ம் எதிரி பூவரசன் இடுப்பில் மிதித்ததாக எங்கு குறிப்பிட்டுள்ளது என்றால் காலால் மாறிமாறி மிதித்ததாக தான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) 1ம் எதிரி சேதுராமன் மற்றும் 2ம் எதிரி பூவரசன் ஆகியோர் அ.சா.1ன் தலை முடியை பிடித்து அடித்தாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் அ.சா.1க்கு சிகிச்சை எடுத்த மருத்துவரை சாட்சியாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை.

6) அ.சா.1க்கு சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட நுண்கதிர் புகைப்படத்தை நீதிமன்றத்தில் சமர்பித்தேனா என்றால் இல்லை. அ.சா.1 வாக்குமூலத்திலோ,

என்னுடைய விசாரணையிலோ 5ம் எதிரி கருமலையான் அ.சா.1யை அடித்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை இருப்பதனால் அ.சா.1ன் வயது முதிர்வின் காரணமாக அவர் கீழே விழுந்ததை மனதில் வைத்து கொண்டு அ.சா.1 எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்று கொடுத்த பொய்யான வாக்குமூலத்தை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.